கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

LIBRARY 23 AUG 2013 EASTERN UNIVERSITY, SRI LANKA

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2010/2011 (ஜனவரி/பெப்ரவரி 2013)

# EDUS 4102 ஒப்பீட்டுக் கல்வி

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.

01. (அ) ஒப்பீட்டுக்கல்வியைக் கற்பதன் மூலம் ஏற்படும் பயன்பாடுகளைக் கல்வி அபிவிருத்தியுடன் தொடர்புபடுத்தி விளக்குக.
(08 புள்ளிகள்)

(ஆ) புவியியல் ரீதியான காரணிகள் எவ்வாறு கல்வி அபிவிருத்தி மீது செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை உதாரணங்களுடன் விளக்குக.
(08 புள்ளிகள்)

(இ) ஒரு நாட்டின் அரசியல் ஆட்சி முறையானது அந்நாட்டின் கல்வி முறையில் தாக்கத்தைச் செலுத்துகின்றது என்பதை இலங்கையின் கல்வி வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.
(09 புள்ளிகள்)

02. (அ) ஒப்பீட்டுக் கல்வியைப் பெறும் முறைகளைக் குறிப்பிட்டு விளக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ)பண்டைய குருகுலக் கல்வி முறையில் காணப்பட்ட விஷேட பண்புகளை விளக்குக.
(07 புள்ளிகள்)

(இ) இலங்கையின் பண்டைய உயர்கல்வி அமைப்பில் "பிரிவேனாக் கல்வி" நிலையங்களின் பங்களிப்பினை ஆராய்க.
(08 புள்ளிகள்)

03.(அ) போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் கல்விப் பணியாற்றிய குழுக்களின் பெயர்களைக் குறிப்பிட்டு இக்காலத்தில் காணப்பட்ட கல்வி அமைப்புக்களைப் பற்றிக் கருத்துரைக்குக.
(09 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் கல்வி வரலாற்றில் ஒல்லாந்தரின் பாடசாலைக் கல்வி ஆணைக்குழு மேற்கொண்ட பணிகளைப் பற்றிக் குறிப்புரை வரைக.
(08 புள்ளிகள்)

(இ) ஒல்லாந்தர் இலங்கைக் கல்வியில் ஏற்படுத்திய முக்கிய மாற்றங்களை ஆராய்க.
(08 புள்ளிகள்)

04.(அ) கோல்புறூக் ஆணைக்குழுவானது இலங்கையில் மேற்கொண்ட கல்விப் பணிகளை ஆராய்க?

(08 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்த மோர்கன் குழு முன்வைத்த சிபார்சுகளைப் பகுப்பாய்வு செய்க.

(08 புள்ளிகள்)

(இ) இலங்கையில் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட கல்வி வளர்ச்சியில் உயர்கல்வி அமைப்பில் ஏற்பட்ட வளர்ச்சிப் போக்கினை ஆதாரங்களை முன்வைத்து விளக்குக.

(09 புள்ளிகள்)

05.(அ) சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் தொழிற்கல்விக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தினை அந்நாடுகளின் தற்கால கல்வி முறையினை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(09 புள்ளிகள்)

(ஆ) தனியார் பங்குபற்றலினால் இந்தியாவின் கல்வி அமைப்பில் ஏற்படும் பிரச்சினைகளை உதாரணங்களுடன் விளக்குக.

(09 புள்ளிகள்)

(இ) அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளின் கல்வி முறையை அடிப்படையாகக்கொண்டு பல்சமய, பல்கலாசாரக் கல்வி தொடர்பாக உமது கருத்துக்களை முன்வைக்க.

(08 புள்ளிகள்)

06.(அ) "ஒரு நாட்டின் கல்வி முறையில் காலத்திற்குக் காலம் ஏற்படுகின்ற படிப்பினைகளானவை இன்னொரு நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு அத்திவாரமாய் அமைகின்றன." இக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் உயர்கல்வி அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவதாயின் எந்த நாட்டின் படிப்பினைகளை ஆதாரமாகக் கொள்வீர்? எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்துவீர் என்பதனை உதாரணங்களுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) 1977 களின் பின்னர் இலங்கையின் கல்வி வளர்ச்சிப் போக்கினை உதாரணங்களுடன் பகுப்பாய்வு செய்க.

(13 புள்ளிகள்)

***